**‘பொற் கனவுப்’ பொழுது** **த.ஜெயசீலன்.**

மொழியின் அரசி கவிதையென்பர். உலக மொழிகள் எல்லாமே கவிதைக்கு முதலிடம் வழங்கியிருக்கின்றன. தமிழானது கவிதையையே தனது தலைப்பிள்ளையாக சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தலைமேல் தூக்கி வைத்துப் போற்றிக் கொண்டாடி வருகிறது.

ஈழத்துக் கவிதை **ஈழத்துப் பூதந் தேவனாருடன்** ஆரம்பித்த போதும் அது வீரியம் பெற்று வளர்ந்துயர்ந்து ஒளிர்வது கடந்த சுமார் எழுபது ஆண்டுகளாகவே எனலாம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை பெருங் காடாய் ஈழவள நாட்டுக்கும் ஈழத் தமிழர்க்கும், தமிழுக்கும் இன்னோரன்ன விதங்களில் சுவாத்தியமும் அருளும் பாலித்து வருகிறது என்றால் மிகையில்லை. இவ் ஈழக் கவிதைக் காடு இன்று உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து கிடக்கிறது. இக் காட்டில் மிகப் பெரும் கவிதை விருட்சங்கள் பல நிறைந்து உள்ளன. இக் கவிதைக் காட்டில் இன்றைக்கும் இடையறாது இளங் கவி நாற்றுக்கள் சில முளைவிட்டு வளர்ந்து செழித்துக் கொண்டிருக்கின்றன. கால மழை என்றுமே வஞ்சிக்காமல் இக்காட்டைப் போஷித்து அது அழிந்து போகாமல் பசுமை பொலியப் பரிபாலித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு கடந்த சில வருடங்களாக எம் ஈழக் கவிதைக் காட்டில் முளைவிட்டு வளர்ந்து கொண்டிருக்கும் இளங் கவி நாற்றுகளில் ஒருவர் தான் கவிஞர் **வேலணையூர் ரஜிந்தன்.** வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, முகநூல், இணையம் ஊடாக தன்னை தமிழ்க் கவிதை இலக்கியத் துறையில் இனங்காட்டி வருபவர் இவர். தமிழின் இயற் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கும் இவர் ஒரு ஆசிரியராவார். இவரது முதற் கவிதைத் தொகுப்பு **‘பொற்கனவாக’** நனவின் சாட்சிகளாக வெளிவருகிறது.

தன்னை ஒரு இளைய தலைமுறைப் புதுக் கவிஞனாக, புதுக் கவிதைக் காரனாக, இனங்காட்ட முயலும் இவரின் கவிதைகளில் அனேகமானவை தமது வாழ்வனுபவங்களினூடாக சமூகத்தின் இன்னோரன்ன முகங்களின் அழகுகளையும் அசிங்கங்களையும் பேசிச் செல்கின்றன.

இன்றைய முகப்புத்தகக் கவிஞர்களில் ஒருவராக, அக் கவிஞர்களுக்கே உரித்தான சில அடையாளங்களைக் கொண்டு விளங்கும் இவரின் கவிதைகளின் பரவலான அறிமுகத்துக்கு முகப்புத்தகம் பெரும் ஆதரவையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருக்கிறது. இம் முகப்புத்தக அறிமுகத்தூடாக இவர் பல கவி நட்புகளையும் பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார். இவர் ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராக யாழ் இலக்கியக் குவியத்தினூடாகவும் பயணித்துக் கொண்டும் இருக்கிறார்.

**“என் மூச்சும், வாய்ப் பேச்சும், கவி வீச்சும் தமிழையே உயர்வாய்ப் போற்றும் என்றும் தரணியில் தமிழைப் பறைசாற்றும்”** என்றும் இவர் உறுதியாக நம்பி நடக்கிறார்.

இன்று புதுக் கவிதை படைக்கும் இளையோர் வழியில் தான் சார்ந்து உணர்ந்த அனுபவங்களை அதிகம் நேரடித் தன்மையில் பெருஞ் சோடனைகள், ஆடம்பரங்கள் இன்றி கட்டற்ற உணர்ச்சி வெளிப்பாடாக சில சமயங்களில் ஒரு ஓசை வழிப்பட்ட இலய ஒழுங்கில் கவிதைகளாக வெளிப்படுத்துவது இவரது பாணியாகிறது.

**‘வான மங்கை’** என்பதில்,

**“நாணம் கொண்டவளாய் - மெல்ல**

**வெட்கத்தில் நாணும் அழகு**

**அவள் அங்கம் எங்கும் செக்கச் சிவக்கிறது.**

**காதல் நாயகன் சூரியன்**

**அந்தி சாயும் அழகிய தருணமதில்....”** என்று வர்ணிக்கிறார்.

**“பொட்டு வெய்யில் என்மேல் பட்டதற்கு**

**பட்டுப் புழவாய்த் துடித்தவள் நீயல்லவோ”** என ஓசை ஒழுங்குடன் தாயின் பெருமை பேசுகிறார்.

‘**கடலும் வானும்**’ எனும் கவிதையில்

**“வானத்து தேவதை தன்னை அலங்கரித்த**

**பொருட்களை வைத்துப் பாதுகாக்கும்**

**சிறு பாத்திரமா இந்தச் செக்கச் சிவந்த சூரியன்?**” என நவீன கவிஞர்கள் கையாளும் படிமங்களையும் பயன்படுத்திப் பார்க்கிறார்.

அன்னை தெரேசாவை **உலக அன்னை** எனக் கண்டு மகிழ்கிறார்.

**‘உறங்கும் நினைவுகளில்’** எனும் கவிதையில்

**“என் தனிமைத் தவிப்புகள்**

**தீர்ந்ததாய் இல்லை**

**ஏக்கப் பெருமூச்சு**

**உயிர்த்தெழுகிறது”** எனவும்,

**“வானத்தை எட்டிப் பார்க்க**

**எத்தனிக்கும் வெறுமை விழிகள்**

**நட்சத்திரப் பறவைகள் கூட**

**அகப்பட வில்லை**

**எங்கும் மயான அமைதி**

**ஒலிகள் இறந்துவிட்டன போலும்”** எனவும் ஒரு நவீனக் கவிஞனாய்க் குமுறுகிறார்.

இயற்கையில் இலயிப்பதும் அதன் சூட்சுமங்களை உணர்ந்து வியப்பதும் அதன் அழகுக்கும் இயக்கத்திற்கும் ஆயிரம் அர்த்தம் கற்பிப்பதும் கவிஞரின் பண்பு.

**காற்றை….**

**"பூமியின் உயிர் மூச்சே**

**உயிர்களின் சுவாசக் காற்றே**

**பூக்களோடு காதல் பேசி**

**தென்றலாகித் தாலாட்டுப் பாடு…"** என பாடியபடி

**"இயற்கையில் நலம் சேர்க்கிறாய்**

**செயற்கையில் சிறை பிடிக்கிறார்**

**கிராமத்தில் சுத்தமான உன்னை**

**நரகங்களில் அசுத்தம் ஆக்குகிறார்…."**எனக் காற்றையும் கருவறுக்கும் மானுட அரசியலை சமூக நோக்கில் சாடுகிறார்.

**நிழலைத் தேடி** எனும் கவிதை அவரின் நெஞ்சத் துயரை

**"காய்ந்து சருகாகி**

**ஓற்றை நம்பிக்கைத் துளிக்காக**

**மரத்தோடு ஒட்டியிருக்கும்**

**இளம் குருத்தாக உள்ளம்…"**என்று உவமிக்கிறது.

சந்தம் சிந்தும் பாக்களும் தனக்கு வாலாயம் ஆகும் என முயற்சித்திருக்கும் இவர்

**"அன்பே எங்கள் ஒற்றை இறையாம்**

**அகிலம் போற்றும் அன்னை மொழியாம்**

**அன்பே என்றும் வாழ்வின் வழியாம்**

**அதுவே உலகின் அழியா மறையாம்…"** என்று அகவற் பாவுக்கு நெருக்கமாகவும்ம்,

**"வாழ்க்கை என்னும் சக்கரமும்**

**வண்டில் சில்லாய்ச் சுழல்கிறதே**

**மேடு பள்ளந் தாண்டியிங்கே**

**பயணங்களும் நடந்திடுதே"** என்று ஆறுசீர் விருத்த வகையொன்றுக்கு அண்மையாகவும்,

**“பற்றி எரியும் பருவத் தீயில்**

**கற்ற கல்வியும் கருகியதே**

**கட்டிக் காத்த பண்பாடும்**

**கவலைக்கிடம் ஆகியதே”** என்றும்,

**“தேகத்தின் தேடல்வழி**

**தேய்கிறது நியாயங்கள்**

**தேடலின்றித் திட்டமின்றி**

**தொலைகிறது எதிர்காலம்”** என்றும்,

**“நெஞ்சில் துணிவு உயர்வில் பணிவு**

**நாவில் உண்மை சேர்த்து**

**நேர்மை கொண்டு விவேகம் கண்டு**

**செயலில் வேகம் கூட்டு**

**துன்பம் துயரம் தாக்கும் நேரம்**

**துணிந்து எதிர்த்து நின்று**

**தக்க தருணம் அமையும் சமயம்**

**வெற்றி மாலை சூடு”** என்று ஏழுசீர் விருத்தத்துக்கு கிட்டவாயும் வாயெடுத்துப் பாடுகிறார். எம்மையும் மனவாயால் பாடவும் வைக்கிறார்.

இவரின் பல கவிதைகள் இவ்வாறு வெவ்வேறான ஓசைநயம் உள்ளோடும் பாக்களாக திகழ்கின்றன. இவ் ஓசை ஒழுங்குகளை மேலும் மேம்படுத்தும் போது அதாவது இதற்கு ஆதாரமான யாப்புப் பற்றிய அறிவையும் பயிற்சியையம் கவிதையின் இன்னோரன்ன பண்புகளையும் இவர் மேலும் பயிலும் போது இவரின் கவிதைகள் மென் மேலும் செம்மையுற வாய்ப்புள்ளது.

யுத்தம் முடிந்து ஒன்பதாண்டுகள் நிறைவுற்ற நிலையில் அவ் யுத்த நினைவுகளை மீட்டு துயருற்று நிற்கிறார் கவிஞர்.

**“அலைகடல் மீதிலும்**

**காவியம் பாடினோம்**

**முகிலிடை நிலவை**

**கவிதையில் சாடினோம்.**

**ஓடினோம் ஓடினோம்**

**வானிலும் ஓடினோம்**

**தேடினோம் தேடினோம்**

**விடியலைத் தேடினோம்''** என்பதும்,

**"ஆசைகளைச் சங்கிலிப் பூட்டில்**

**இறுகப் பூட்டி இளமைக்கு**

**தீயிட்ட ஆயிரம் ஆயிரம்**

**இளைஞர் யுவதிகள்...**

**ஈழத் தாயின் கண்ணீர் துடைக்கப்**

**புறப்பட்ட தலைவர்கள்...**

**மண்ணுக்குள் வித்தானார்கள்**

**இப்போதும் அங்கே கண்ணீர் சிந்தி**

**கலங்கிக் கொண்டிருப்பார்கள்''** என்பதும்,

**"சுயநல ஓநாய்களின்**

**ஆசை வெறித் துரோகத் தனங்கள்**

**ஆடை செய்து உடுத்திக் கொள்ள**

**விடுதலைக் கனவுகளின்**

**ஆடைகள் களையப் பட்டது**

**நீதி அன்னை தெருவுக்கு வீசப்பட்டாள்**

**ஈழமே இருண்டு போனது**

**ஒளிவழங்கிய தீபங்களும் அழிக்கப்பட்டன.**'' என்பதும் இவரினது ஆதங்கம் மட்டுமல்ல. உலகத் தமிழரின் ஆதங்கம் எனலாம்.

**பொற்கனவு** சுமார் அறுபத்தியாறு பெரிதும் சிறியதுமான அனேகம் ஓசை வயப்பட்ட ஆனால் புதுக்கவிதைகளான கவிதைகளை அதிகம் கொண்ட முதற் தொகுதியாக கவிஞர் வேலணையூர் ரஜிந்தனால் வெளியிடப்படுகிறது. இக் கவிதைகள் பல தரப்பட்டவை. கவிஞரின் ஆரம்ப காலக் கவிதைகளாக சில குறைகளைக் கொண்டிருப்பினும் தனித்துத் தெரியும் பண்பு உடையவை. ஏனைய இன்றைய முகப்புத்தகக் கவிஞர்களிலிருந்து சற்று விலகிச் செல்பவை.

இயற்கை இரசனை பேசுபவை, அகவயச் சிந்தனைகளைப் பேசுபவை, சமூகப் பாங்கானவை, மனித மனப் பண்புகளை மனித முரண்களை மனிதத்தின் கீழ்மைகளை அதேநேரம் பல சிறப்புகளைப் பேசுபவை, எமது மண்ணின் கடந்த கால அவலங்களைப் பேசுபவை, பலிக்காத மன ஏக்கங்களை கனவுகளைப் பேசுபவை. பல நனவுகளின் பிழி சாறுகளைக் கலந்த இனிப்பும் கசப்பும் உடைய பொற்கனவாக மனநாவில் சுவையை உணர்த்துபவை, எனவும் இக் கவிதைகள் பாடுபொருளில் பரந்து விரிகின்றன.

பல விளக்குகளைப் பற்றி வர்ணித்து, முடிவில்

**“விளக்கீடு வீட்டிலெல்லாம்**

**அடுக்கடுக்காய்ப் பலவிளக்கு**

**எல்லாமே அணைந்தாலும்**

**அணையாதது ஒருவிளக்கு –அது**

**அறிவென்ற திருவிளக்கு”**

என்று முத்தாய்ப்பாய் முடிக்கிறார். அதில் அவர் தான் ஒரு கவிபுனையும் ஆசிரியன் என்பதையும் நிரூபிக்கிறார்.

ஈழத்துக் கவிக் கானகத்தில் தானும் ஒரு விருட்சமாக மாறத் துடிக்கும் வேட்கையை இந்த இளங் கவிநாற்றின் **பொற்கனவு** வரிகள் எடுத்து இயம்பி நிற்கின்றன. இதற்கான பல கவிக் கீற்றுகள் ஆங்காங்கே தொகுதி முழுவதும் விரவிக் காணக் கிடக்கின்றன.

நான் ஏலவே கூறியது போல கவிதை என்பதும் குறிப்பாய்த் தமிழ்க் கவிதை என்பதும் நீண்ட இடையறாத தொடர்ச்சியானது. மிகமிகப் பிரமாண்டமான வரலாறும் வீச்சும் வியாபகமும் கொண்டது. மிகமிக பரந்து விரிந்தது. உலகக் கவிதைக்கே இலக்கணமாக, எடுத்துக்காட்டாக, முன் உதாரணமாக, நின்றிருப்பது. அத்தளத்தில் வைத்துப் பார்க்கும் போது இளங் கவி நாற்றான ரஜிந்தன் இன்னும் இன்னும் தமிழ்க் கவிதைகளையும் உலகக் கவிதைகளையும் இடையறாமல் வாசிப்பதும் அவற்றை தொடர்ச்சியாக பயில்வதும் அவரை மேலும் வளர்க்கச் செம்மைப் படுத்த உதவும் என்பது எனது அபிப்பிராயம்.

ஓரளவு ஓசை வயப் பட்ட, ஓசை ஒத்திசைவான, அகப் புறச் செவிகளுக்கு இனிமை தருகின்ற, கவிதைகளை இயல்பாக படைக்கும் ஆற்றலுள்ள இவர் தமிழிலக்கணத்தை யாப்பு வகைகளை பயிலுதல் அவரின் ஆற்றலை மேலும் மேம்படுத்தும். அதே நேரம் இன்றைய புதுக் கவிதையின் சில பிடிகளையும் இவர் கையாள்வது அவரை அடுத்த படிநிலைக்கு நிச்சயம் உயர்த்த உதவும்.

ஈழத்தின் தலைமைக் கவிஞர் முருகையனின் கூற்றொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அவர் சொன்னார் **“ஒரு கவிதை மரபுக் கவிதையாகவும் இருக்க வேண்டும். அதே நேரம் அது புதுக்கவிதையாகவும் இருக்க வேண்டும்”** என்று.

அதாவது தமிழுக்கென்றே சிறப்பான தனித்துவமான ஓசை வயப்பட்ட, வேறு மொழிக் கவிதைகளில் இல்லாத பல பண்புகளை உள்ளடக்கிய மரபுக்கவிதையின் அம்சங்களைக் கவிதை அடிப்படைகளாக கொண்டிலங்குகிற அதே நேரம் அரைத்த மாவையே அரைப்பது போலப் பாடியதையே பாடிக்கொண்டிராமல் புதிய சிந்தனைகளை, புதிய பார்வைகளை, புதிய பாடு பொருளை, அவரவருக்கென்று உதிக்கும் புதுமையான கற்பனைகளை, புதுப்புது உத்திமுறைகளை கவிதை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவரின் கருத்தாகும்.

**'பயில்தொறும் நூல் நயம்'** என்பார்கள். ரஜிந்தன் தொடர்ந்து தமிழின் பலவகையான அன்றைய பழைய, இன்றைய நவீன, கவிதைகளைத் தேடி வாசித்து தனது பாணியை இனங்காண்பதும் கவிதையின் இன்னோரன்ன பண்புகளையும் கவிதையின் இன்றைய நவீன எடுத்துரைப்பு, கவிதை சொல்லலில், புழங்கும் புதுப்புது உத்தி முறைகளை அறிந்து தெளிந்து அவற்றை தனது கவிதையில் புகுத்திக் கொள்வதும், தனது தனித்துவ அடையாளத்தை இனங்கண்டு அதனை தனது கவிதைகளில் ஆழமாகப் பதிக்க முயல்வதும் அவரை எதிகாலத்தில் ஒரு முழுமையான கவிஞனாக மாற்றும் என நம்புகிறேன்.

22.05.2018